# இபலோகம பிரதேச சபை
# அநுராதபுர மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 21 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 01 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, இப்பலோகம பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளை பேணியிருந்தததுடன், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளை உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | |
|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவினம் | சொத்துக்கள் |
| | | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 01 | - | - | 236 |
| (ஆ) | நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபாடுகள் | 05 | - | - | 138 |
| | - மேற்படி - | 01 | - | 04 | - |
| (இ) | நிதிக் கூற்றுக்களில் முறையற்ற வெளிப்படுத்தல்கள் | 01 | - | - | 04 |
| | - மேற்படி - | 01 | - | 95 | - |
| | - மேற்படி - | 01 | 200 | - | - |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் ரூபா 692,781 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் மீதிகள் ரூபா 719,648 ஆக இருந்தது.

### 1.3.3 இணக்கமின்மைகள்

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 237 இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் களஞ்சிய வழங்கல்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது உரிய பொருட்கள் ஒப்பந்தங்களின் பிரகாரம் உண்மையாகவே களஞ்சியத்திற்கு கிடைக்கப் பெற்றமை, அவைகள் களஞ்சிய ஏடுகளில் உள்ளடக்கப்பட்டமை என்பன களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தரினால் கொடுப்பனவு உறுதிச்சீட்டில் உறுதிப்படுத்தல்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டினுள் ரூபா 780,030 ஆன பொருட்கள் கொள்வனவுகளின் போது இத் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,574,294 ஆக இருந்ததுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,606,191 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010<br>மதிப்பிடப்பட்ட | <br>உள்ளவாறான | <br>திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009<br>மதிப்பிடப்பட்ட | <br>உள்ளவாறான | <br>திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) | வீதவரியும் வரியும் | 469 | 375 | 522 | 88 | 56 | 24 |
| (ஆ) | வாடகை | 555 | 424 | 133 | 407 | 333 | 126 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 360 | 525 | - | 410 | 410 | 0 |
| (ஈ) | ஏனைய வருமானம் | 3,400 | 1,232 | 964 | 3,700 | 1,075 | 1,820 |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் இரண்டு நீதிவான் நீதிமன்றங்களினால் 2010 திசம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 522,526 ஆன தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 845,570 தொகையான முத்திரைக் கட்டணங்கள் கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.4 வருமான அறவீட்டினுள்ள பலவீனங்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ரணஜயபுர உத்தேச வீடமைப்புத் திட்டப் பிரதேசத்திற்காக 2010 சனவரி 15 ஆந் திகதியிலிருந்து ஆதனவரி விதிக்கப்பட்டிருந்தது. 2010 சனவரி 15 ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அறிவித்தல் பலகை வருமானம், வாகனம் மற்றும் மிருக வரிகள் மற்றும் மூலதன காணிப் பெறுமதிகளுக்கும் வரி விதிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2011 மார்ச் 25 வரை விதிக்கப்பட்டிருந்த மேற்கூறப்பட்ட வரிகளை அறவிடுவதற்கு எவ்வித வேலைத்திட்டங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கடை வாடகை

சபைக்குரிய கடைகளிலிருந்து 2010 ஆம் ஆண்டிற்காக வாடகைப் பணம் அறவிடுகின்ற போது மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொள்ளாமல் முன்னைய வருட அடிப்படையில் அறவிடப்படாமையினால் சபைக்கு ரூபா 325,700 ஆன நிதி ரீதியான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **செலவின விடயம்** | **பாதீடு செய்யப்பட்டது** | **உள்ளவாறான** | **முரண்** | **பாதீடு செய்யப்பட்டது** | **உள்ளவாறான** | **முரண்** |
| **மீண்டுவரும் செலவினம்** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** |
| ஆளணி வேதனம் | 9,086 | 8,774 | 312 | 7,939 | 7,538 | 401 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஏனையவை | 4,005 | 3,777 | 228 | 3,606 | 3,476 | 130 |
| | --------- | ------------ | ----------- | --------- | ------------ | ----------- |
| உப மொத்தம் | 13,091 | 12,551 | 540 | 11,545 | 11,014 | 531 |
| மூலதனச் செலவினம் | 11,732 | 36,206 | (24,474) | 7,869 | 9,387 | (1,518) |
| | ------------- | ------------ | ---------- | ------------- | ------------ | ----------- |
| மொத்தம் | 24,823 | 48,757 | (23,934) | 19,414 | 20,401 | (987) |
| | ======= | ======= | ====== | ======= | ======= | ====== |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

(அ) 2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 01 | 01 |
| இரண்டாம்தரங்கள் | 05 | 11 |
| ஆரம்ப தரங்கள் | 15 | 12 |
| வேறு (அமைய / தற்காலிக) | - | 03 |
| | -------- | -------- |
| மொத்தம் | 21 | 27 |
| | ===== | ===== |

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த எல்லையை விஞ்சி 09 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மீளாய்வாண்டிற்காக சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 1,213,030 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

(அ) வடமத்திய மாகாண பிரதம அமைச்சின் ஊடாக அரிசி மா உற்பத்தியுடன் அண்மித்த பேக்கரி உற்பத்தி செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக 2007 ஆம்

ஆண்டில் பிரதேச சபைக்கு ரூபா 814,000 பெறுமதியுடைய உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிராமையால் அவ்உபகரணங்கள் செயற்பாடற்று காணப்பட்டது.

(ஆ) இடர் முகாமைத்துவ அமைச்சினால் குப்பைகளை அகற்றுவதற்காக 2008 ஆம் ஆண்டின் போது பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 895,000 பெறுமதியான பவர்டெக்ட் டெக்ரர் 2010 செப்தெம்பர் மாதத்திலிருந்து பயன்படுத்தப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.5.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 792,650 ஆக இருந்தது.

### 2.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரணஜயபுர ரணவிரு கிராமத்தின் வாராந்த சந்தை மற்றும் மலசல கூடம் நிர்மாணிப்பத்காக உள்நாட்டுக்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 03 மில்லியனான கடன் பணம் பெறப்பட்டு ரூபா 2,954,068 ஆன செலவினங்கள் செய்யப்பட்டு உரிய நிர்மாணங்களின் வேலைகள் பூர்த்தியடைந்திருந்த போதிலும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் கட்டிடம் மூடப்பட்டிருந்தது.

(ஆ) உரிய கடனைப் பெறுவதற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயற்திட்ட அறிக்கைகளின் பிரகாரம் சந்தை வளவினுள் 40 கடைகள் நிர்மாணிக்கப்பட்டு அவைகளை வாடகைக்கு விட்டு மாதாந்தம் ரூபா 40,000 ஆன வருமானமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் அப்பணத்திலிருந்து உள்நாட்டுக்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் தவணைப்பணம் மற்றும் வட்டியினைச் செலுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் உரிய முறையில் செயற்படுத்தப்படாமையினால் உரிய கடன் தவணைப்பணம் மற்றும் வட்டி என்பவைகளை சபை நிதியத்திலிருந்து செலுத்த வேண்டி நேர்ந்தது.

## 2.7 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்த முடியாத செலவினங்கள்

ஒரு வருடத்தினுள் ரூபா 1,000 இணை விஞ்சி மேற்கொள்ளப்படுகின்ற நன்கொடை நிதிகளுக்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 69,050 ஆன நன்கொடைக்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132 ஆவது பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பந்தியின் பிரகாரம் வேலை சேவைகளுக்காக ஒப்பந்தங்களை வழங்குகின்ற போது ஒப்பந்தப் பெறுமதியில் ஆகக்கூடியது 20% ஆன முற்பணம் வழங்க முடியுமான போதிலும் அவ் எல்லையினை விஞ்சி ரூபா 300,000 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.9 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தின் மக்களின் வசதிகள், நலன்புரி செயற்பாடுகள், சுகாதாரம், பாதைகள் மற்றும் பொது உபயோகசேவைகளுக்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக எதிர்வரும் ஆண்டுகளின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத்திட்டத்தை மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.10 ஒப்பந்த நிர்வாகம்

### நிர்மாணங்கள்

சபையினால் கீழே குறிப்பிடப்படும் நிர்மாணங்களுக்காக மாகாணப் பொறியியலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட நிலைமைக் கட்டுப்பாட்டு அறிக்கை முழுமையாகக் கவனத்திற் கொள்ளப்படாது ரூபா 3,686,318 ஆனது மீளாய்வாண்டினுள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

| | மதிப்பீட்டுத் தொகை | செலுத்திய பணம் | | நிலைமைக் கட்டுப்பாட்டு அறிக்கையின் பிரகாரம் அவதானிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | |
| ரணஜயபுர ரணவிரு கிராமத்தின் மலசலக்கூட கட்டிட நிர்மாணம் | 1,544,026 | 1,460,666 | | கொங்ரீட்களின் கலவைகளின் பலம் பலவீனமான நிலையில் காணப்படுகின்றமை. |
| ரணஜயபுர ரணவிரு கிராமத்தின் வாராந்த சந்தைக் கட்டிட நிர்மாணம் | 1,972,845 | 1,934,825 | (i) | நிலத்தில் கொங்ரீட் தட்டுக்கள் பலவீனமான நிலையில் காணப்படுகின்றமை. |
| | | | (ii) | கொங்ரீட்களின் கனம் போதியளவில் காணப்படாமை. |
| சேனபுர கொஹோம்பகஸ் சந்தியிலிருந்து வீதிக்கு கொங்ரீட் இடுதல். | 340,000 | 290,827 | | கொங்ரீட்களின் கலவைகளின் பலம் பலவீனமான நிலையில் காணப்பகின்றமை. |
| | | 3,686,318 | | |

## 2.11 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) ஒப்பந்த நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்